**டிசம்பர் - 27**

**"பிள்ளைகளே, நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி, உங்களைக் காத்துக் கொள்வீர்களாக."**

**- 1யோவா 5.21.**

நாம் தலைவர்களிடத்தில் நம்பிக்கை வைக்காமல், கர்த்தரிடத்தில் நம்பிக்கை வைக்க வேண்டும். இப்படிச் சொல்லுவதை நாம் தலைவர்களை நம்பக்கூடாதென்றோ, அவர்களை ஒப்புக்கொள்ளக் கூடாது என்றோ, கருதக்கூடாது. ஏனென்றால், தன்னுடைய ஜனங்கள் கிருபையின் மேல் கிருபையிலும், ஞானத்தின் மேல் ஞானத்திலும் வளர அவர்களைப் போதிக்கவும், வழிநடத்தவும், அவர் மானிடப் பிரதிநிதிகளை உபயோகிக்க இஷ்டப்படுகிறார். என்பதைத் தன்னுடைய அடையாளமான நிறைவேறுதலான ஜனங்களிடத்தில் கர்த்தர் கொண்டிருந்த விவகாரங்களின் முழு சரித்திரமும் நமக்குக் காட்டுகிறது. நாம் படிக்க வேண்டிய பாடம் என்னவென்றால், கர்த்தர் தன்னுடைய சொந்த வேலையை நிர்வகிக்கப் புராணமாகத் தகுதியுள்ளவராயிருக்கிறார் என்பதும், மானிடப் பிரதிநிதிகள் மூலமாக அவருடைய நடத்துதலுக்காக நாம் எதிர்நோக்கி இருக்கும்பொழுது, நம்முடைய நம்பிக்கை அவர்களிலோ, அவர்களுடைய ஞானத்திலோ, அவர்களுடைய பலத்திலோ இருக்கக் கூடாது. ஆனால், அவர்களையும், அவர்கள் மூலமாக நம்மையும் வழிநடத்துகிற கர்த்தருடைய ஞானத்திலும், பலத்திலும் இருக்க வேண்டும். -
**Z 02, 284 (R 3077).**

விக்கிரகங்கள் எப்பொழுதும் கெட்டியான மூலப்பொருட்களினாலான விக்கிரகங்கள் அல்ல. யேகோவாவைத் தவிர, ஜனங்கள் தலைவணங்கித் தங்களுடைய பிரதானமான பக்தியைச் செலுத்துகிற சரீர சம்பந்தமான, மனது சம்பந்தமான, நீதிநெறி சம்பந்தமான, பக்தி சம்பந்தமான எல்லாப் பொருட்களும் விக்கிரகங்களே. ஒருவர் தன்னுடைய பிரதானமான பக்தியை செலுத்த வேண்டியவர் தன்னுடைய தேவனுக்கு, அது யேகோவாக இல்லாதிருந்தால் அது ஒரு விக்கிரகம். இவ்விதமாகப் பார்ப்போமானால், சிலர் தங்களுடைய சமயக்கோட்பாடுகளை, மதப்பிரிவுகளை, வகுப்புகளை, தங்களையே தங்களுடைய பேராவலை, தோற்றத்தை, உடையை, ஓய்வை, கல்வியை, பதவியை, மக்களின் நன்மதிப்பை, பாதுகாப்பை, கருத்துக்களை, உரிமைகளை, பசியை, வீட்டை, சொத்தை, குடும்பத்தை, பட்டத்தை, சிநேகிதரை, தேசத்தை, தலைவர்களை, எதிர்பாலானோரைத் தங்களுக்கு விக்கிரகங்களாக்கிக் கொள்கிறார்கள். புறசமயத்தாருடைய பொருட்களினாலான விக்கிரகங்களுக்கு ஊழியம் செய்வதைத் தவிர்க்கிற நம்மை மேலே சொல்லப்பட்ட விக்கிரகங்கள் வசீகரித்துச் சிக்க வைக்கின்றன. விஷேசமாக இந்த விக்கிரகங்களுக்கு நாம் விலகியிருக்கவே அப்போஸ்தலன் நமக்கு புத்தி சொல்கிறார். இப்படிப்பட்ட விக்கிர வழிபாட்டிற்கு இடங்கொடுப்பது, தனக்கும், உலகத்துக்கும் செத்து தேவனுக்கென்று பிழைத்திருப்போம் என்று செய்த நம்முடைய பிரதிஷ்டையிலிருந்து நாம் பின்வாங்கிப் போவதையும், சாத்தானின் கட்டளைக்கிணங்கி பாவத்திற்கும், தப்பான உபதேசங்களுக்கும், சுயநலத்துக்கும், உலகத்தனத்துக்கும், ஊழியக்காரனாவதையும் குறிக்கும். **– P 34, 175.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**1கொரி 10.7-14, யாத் 32.23-26, 2கொரி 6.17, யாத் 20.3-6, 1சாமு 15.23, சங் 16.4, 44.20, யோசு 24.23, யோனா 2.8,9, 1கொரி 6.9, வெளி 9.20, 21.8.**

**கோபுர வாசிப்பு : Z 13, 253 (R 5297).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் என்னை விக்கிரகங்களுக்கு விலக்கிக் காத்துக் கொண்டேனா? எப்படி? எந்த நிலமைகளில்? அதில் உதவியாக இருந்ததும் இடையூறாக இருந்ததும் எவை? பலாபலன்கள் என்ன?**